முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

**அ.வ.எண். 80/2022**

நாள். 10.07.2025 | வா.சா.1 – திரு. ராமபாண்டி
த/பெ - திரு.குழைக்காதர்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) வாதி அவருக்கு பாத்தியப்பட்ட 10 செண்டு இடத்தினை அதற்கு செல்லும் விதமாக உள்ள பாதையினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி தான். இந்த வழக்கில் 2ம் தபசில் சொத்தாக பாதை காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான். 2ம் தபசில் சொத்தான பாதை உங்கள் வழக்குப்படி யாருக்கெல்லாம் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு மட்டும் பாத்தியப்பட்டது. 2ம் தபசில் பாதை உங்களுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்பதற்கு விளம்புகை பரிகாரம் எதுவும் நீங்கள் கேட்கவில்லை என்றால் சரி தான்.

2) வழக்கு சொத்திற்குரிய பட்டா உங்கள் மனைவி பெயரில் ஏற்படவில்லை என்று சொன்னால் சரி தான். பி.வா.சா.ஆ.1 ஆவணமானது 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டா என்றால் சரி தான். ஆனால் அவர் மோசடியாக பாதையையும் சேர்த்து பட்டா பெற்றுள்ளார். நீங்கள் உங்கள் வழக்கில் பாதைக்காக 2 செண்டு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரி தான். வழக்கு சொத்தின் புல எண். 1284/2 எ எவ்வளவு விஸ்தீரணம் உடையது என்றால் 50 செண்டு உடையது ஆகும்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.10 18:27:11 +0530

3) அந்த 50 செண்டில் பாதை எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் புல எண். 1284/2 எ – ல் உள்ளது. பாதை தனியாக உட்பிரிவு செய்யப்படவில்லை. 50 செண்டில் யாருக்கெல்லாம் பாத்தியம் என்றால் 50 செண்டில் 10 செண்டு தெற்கடைய பாதையோடு சேர்த்து சுபா லெட்சுமிக்கு பாத்தியப்பட்டது. மீதம் உள்ள இடம் 2ம் பிரதிவாதி பாஸ்கரனுக்கும், சுபாலெட்சுமிக்கும் பாத்தியப்பட்ட இடம் ஆகும். வழக்கு சொத்தினை உங்கள் மனைவி எந்த ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் 2012ம் ஆண்டு கிரையம் பெற்றார்.

4) உங்கள் மனைவி கிரையம் பெற்ற பின்னர் பட்டா வேண்டி விண்ணப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் செய்யவில்லை. வா.சா.ஆ.4 ஆவணமானது 05.08.2022 அன்று புல எண். 1284/2 எ 1 மற்றும் புல எண். 1284/2 எ 2 -க்கு சுபாலெட்சுமி பெயரில் பட்டா கேட்டு விண்ணப்பம் செய்த மனு என்றால் சரி தான். உங்களுடைய வழக்குப்படி வழக்கு சொத்தானது புல எண். 1284/2 ல் உள்ளது என்றால் சரி தான். வா.சா.ஆ.3 ஆனது புல எண். 1284 க்குரிய புல வரைபடம் என்றால் சரி தான். மேற்படி புல வரைபடத்தில் புல எண். 1284/2 எ 1, புல எண். 1284/2 எ 2 என உட்பிரிவு செய்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

5) உங்களுடைய வழக்குரையில் புல எண்ணை உட்பிரிவு செய்து புல எண்ணை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரி தான். 1ம் பிரதிவாதி

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.10 18:27:18 +0530

அஸ்வின் குமார் உங்களுடைய உடன் பிறந்த சகோதரரின் மகன் என்றால் சரி தான். இந்த வழக்கு வாதி சுபாலெட்சுமிக்கு 1ம் பிரதிவாதி மைத்துனர் மகன் என்றால் சரி தான். 2ம் பிரதிவாதி உங்களுக்கு உறவினர் என்றால் சரி தான். உங்களுடைய வழக்குரையில் பிரதிவாதிகள் உங்களுடைய உறவினர்கள் என்று எதுவும் நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி தான்.

6) இந்த வழக்கு சொத்து ஆதியில் சுவாமி தாஸ் மற்றும் வள்ளியம்மாள் ஆகியோர்களுக்கு கிரையமாக பாத்தியப்பட்டது என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ஆவணம் சுவாமி தாஸ் மற்றும் வள்ளியம்மாள் பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரி தான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் அ.பு.ச.1284/2 ஏக்கர் 2.21ல் மேற்கடைய பாகத்தில் செண்டு 10 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். மேலும் சொத்து விவரத்தில் மேற்படி நம்பரில் மேல ஓர பாகம் நாளில் 1ல் கிழக்கடைய 5 லிங்ஸ் அகலத்தில் 380 லிங்ஸ் நீளத்தில் மேற்படி மேற்கண்ட மனைக்குள்ள வழக்கமான பாத்தியமும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

7) புல எண். 1284/2ல் கண்ட ஏக்கர் 2.21 ஆனது பல உட்பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். அந்த உட்பிரிவில் கண்ட சொத்தின் உரிமையாளர்கள் அனைவருக்கும் பாதையில் பாத்தியம் உண்டு என்றால் கிடையாது. சுபாலெட்சுமிக்கு மட்டும் பாத்தியப்பட்டதாகும். நீங்கள் தாக்கல்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.10 18:27:25 +0530

செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தின் படியே 5 லிங்ஸ் அகலமுள்ள பாதையில் நான்கில் ஒரு பங்கு தான் சுவாமி தாஸ்க்கும் அவரது மனைவி வள்ளியம்மாளுக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரி தான்.

8) நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி 2 வது தபசில் பாதைக்கு சுவாமி தாஸ் மற்றும் அவரது மனைவி வள்ளியம்மாள் என்பவர்களை தவிர்த்து மீதமுள்ள 3 பங்குக்குரிய நபர்கள் உள்ளனர் என்றால் சரி தான். அந்த 3 பங்குக்குள்ள நபர்கள் யார் என்று சொல்ல முடியுமா என்றால் ராமபாண்டி மற்றும் சுபாலெட்சுமி என்பவர் ஆகும். நீங்களும் உங்கள் மனைவியும் யாரிடம் இருந்து மீதமுள்ள 3 பங்கினை கிரையம் வாங்கினீர்கள் என்றால் பாஸ்கரன் மற்றும் சுவாமி தாஸ் ஆகியோர்களிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளேன். அதற்குள்ள பத்திரங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான்.

9) வழக்கு 2 ம் தபசில் சொத்துக்குரிய பட்டா உங்கள் பெயருக்கு ஏற்படவில்லை என்றால் சரி தான். உங்களுடைய வழக்குரையில் 27.07.2022 அன்று 1ம் பிரதிவாதி வாதியிடம் 2 ம் தபசில் பாதையினை புழங்க விடாமல் அடைக்கப் போவதாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரி தான். அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் எந்த விதமான புகார் மனுவும் கொடுக்கவில்லை என்றால் புகார் மனு கொடுத்தோம், அதற்கு ரசீது தரவில்லை. நீங்கள் சொல்வது போல் புகார் மனு கொடுத்திருந்தால்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.10 18:27:31 +0530

உங்கள் வழக்குடன் புகார் மனுவினை சேர்த்து தாக்கல் செய்திருப்பீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஆனது தெற்கு வள்ளியூர் ரோட்டிற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்து என்றால் சரி தான்.

10) நீங்கள் சொல்லி உள்ளது போல் புல எண். 1284/2 எ-ல் கிழக்கு ஓரமாக ஸ்தலத்தில் எந்த விதமான பாதையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு கிரையம் கொடுத்த சுவாமி தாஸ் என்பவருக்கு பிராது 2ம் தபசில் சொத்து பாதையினை முழுமையாக கிரையம் கொடுப்பதற்கு எந்த விதமான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. உங்களுடைய  சகோதரரின் மகனான 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தினை அனுபவம் செய்வதற்கு இடையூறு செய்ய வேண்டும் என்பதற்காக நீங்களும் உங்கள் மனைவியும் சேர்ந்து அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

11) நீங்கள் பாதையை  பொறுத்து விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்ட வள்ளியூர் சார்பதிவாளர்அ லுவலக கிரைய  ஆவண எண். 2990/2021 ஐ பொறுத்து கேள்வி கேட்பதற்கு உங்களுக்கு சட்டப்படி அருகதை இல்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியிடம் இருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தை முழு உரிமையாளர் நிலையில் பட்டா சகிதம் 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.10 18:27:37 +0530

என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சொல்லி உள்ளது போல் வழக்கில் 2ம் தபசில் பாதை என்பதே கிடையாது என்றால் சரியல்ல.

12) நீங்கள் வழக்கிற்குரிய தரப்பினரை கட்சியாக சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் நீங்கள் 2ம் பிரதிவாதியை பொறுத்து எந்த விதமான பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2ம் பிரதிவாதிக்கு எந்த விதமான பரிகாரமும் கோரப்படாததால் இந்த வழக்கிற்கு 2ம் பிரதிவாதி அவசியமற்ற தரப்பினர் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கேட்டுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உங்களுடைய வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

13) உங்கள் மனைவி பெயருக்கு ஏற்பட்ட வா.சா.ஆ.2 ஆவணம் செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல, நீங்கள் வா.சா.ஆ.2 ஆவணத்தை உரிமை உள்ள நபரிடம் இருந்து முழுமையாக கிரையம் பெறாமல் ஒருவரிடம் இருந்து மட்டும் கிரையம் பெற்றுள்ளதால் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் சொத்தில் உங்களுக்கு எந்த விதமான உரிமையும் ஏற்படப்படவில்லை என்றால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.07.10 18:27:45 +0530